


# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்



மின்னிதழ்

நவம்பர் 2025



## செயலர் பக்கம்

அருள்பணி. சு. மரிய சூசை

### அன்பு உறவுகளே!

நவம்பர் மாதம் என்றாலே கல்லறைத் திருநாள்தான் கிறித்தவர்களின் நினைவுக்கு வரும். இம்மாதத்தின் இரண்டாம் நாள் இறந்த நம் குடும்ப உறவுகளின் கல்லறைகளைச் சுத்தம் செய்து, மலர் மாலையிட்டு, மெழுகுவர்த்தி ஏற்றி, ஊதுபத்தி, சாம்பிராணி எல்லாம் வைத்து, இறந்த ஆன்மாக்களை நினைவுகூரும் மரபு இன்றளவும் சிறப்பாய்த் திகழ்கிறது. இந்த ஒரு நாள் மட்டும் அல்ல, என்றும் கல்லறைகள் நம்முடைய மேலான கவனத்தைப் பெற்றிட வேண்டும்.

கல்லறை என்பது வாழ்க்கையின் ஆகச் சிறந்த அனுபவங்கள் அயர்ந்த நித்திரையில் இருக்கும் இடம். அது காலத்தின் ஓட்டத்தில் கடவுள் வரைந்த பல காவியங்களும் காப்பியங்களும் கண்ணுறங்கும் இடம். கல்லறை நம்முடைய வாழ்வின் மிகப்பெரிய சிறந்த நூலகம். அது வாழ்ந்து முடித்தவர்களைப் பார்த்து வாழப் பழகுகின்றவர்கள் படிக்கவேண்டிய இடம்.

உரோமையராலும் யூதராலும் கல்லறை என்பது தீட்டாகப் பார்க்கப்பட்டது. யூத வழக்கத்தில் கல்லறைகள் பொதுவாக ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமாக இருக்கும். கல்லறைகளை இறந்தோருடைய நகரம் என்று யூதர்கள் சொல்லிக் கொண்டிருந்தபோது, கிறித்தவர்களுக்கு அது வாழ்வோரின் நகரமாகவே அறிவுறுத்தப்பட்டது. கிறிஸ்துவின் கல்லறையும் அது சுட்டிக்காட்டும் உயிர்ப்புமே அதற்கு சாட்சி.

இயேசுவின் உயிர்ப்பைத் தொடர்ந்து கல்லறைக்கென்று உயர்ந்த உன்னதமான புரிதல் கிறித்தவ மரபில் எப்போதும் இருந்துள்ளது. நம்பிக்கையாளர்கள் மறைச்சாட்சியரின் கல்லறைகளில் கூடி செபித்தும், மறைவாக வழிபாடு நடத்தியும் வந்துள்ளனர். இவ்வாறு கல்லறைகள் நம் விசுவாசத்தின் விளைநிலமாக இருந்துள்ளது குறிப்பிடத்தக்கது. தொடக்கத் திரு அவையின் நாற்றங்கால் கல்லறையே. எனவே இறந்த நம்பிக்கையாளர்களின் கல்லறைகள் இன்றைய நமது நம்பிக்கையின் கருவறைகள் என்னும் தெளிவு நம்மிடம் இருக்கட்டும். கல்லறைகளிலிருந்து கற்றுக்கொள்ளத் தயாராவோம்!

# நிறைபேறு பலன்கள் என்றால் என்ன? #22

பகுதி-1

#02 இல் குறிப்பிட்டுள்ளது போல், படைத்தவரோடும் படைப்புகளோடும் உறவைப் புதுப்பித்துக் கொள்வது யூபிலி ஆண்டிற்கான நோக்கங்களில் ஒன்று.

முதல் பெற்றோரின் வழியாக வந்த பிறப்புநிலைப் பாவம் திருமுழுக்கின் அருளடையாளத்தில் முற்றிலும் நீக்கப்பட்டிருந்தாலும் பாவம் செய்கின்ற நம்முடைய மனித பலவீனம் நீக்கப்படவில்லை.

இந்த பலவீனத்தால் செய்யப்படும் பாவங்கள், படைத்தவரோடும் படைப்புகளோடும் உள்ள நமது உறவில் விரிசலை ஏற்படுத்துகின்றன.

இதை சரிசெய்ய ஒப்புரவு அருளடையாளத்தை நாம் நாடுகின்றோம். இந்த அருளடையாளத்தை நாம் தவத்தின், மனமாற்றத்தின், நல்லிணக்கத்தின் அல்லது மன்னிப்பின் அருளடையாளம் என்றும் அழைக்கலாம்.

இந்த அருளடையாளத்தில் நம்முடைய பாவங்களுக்கான நிலையான தண்டனை (முடிவில்லா நரகம்) அகற்றப்பட்டிருந்தாலும், பாவத்திற்கான தற்காலிக தண்டனை உண்டு.

இந்த தற்காலிக தண்டனையை, நிறைபேறு பலன்கள் நீக்குகின்றன.

**கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு**

**திருவிவிலியம் - திருமறைக்கல்வி - திருவழிபாடு**

**திருச்சி மறைமாவட்டம்**

# #23 பேறுபலன்கள் - தொடர்ச்சி

பேறுபலன்களின் வழியாக, கடவுளுடைய இரக்கத்தின் அளவிட முடியாத இயல்பை நாம் கண்டுகொள்கிறோம்.

ஒப்புரவு அருளடையாளம் வழியாக கடவுள் நம் பாவங்களை மன்னிக்கிறார் என்னும் உறுதியைப் பெற்றிருந்தாலும், அதனால் ஏற்பட்டிருக்கும் இரு விளைவுகளையும் நாம் சரி செய்ய வேண்டும்.

1. நம்முடைய பாவங்களால் ஏற்பட்டிருக்கும் பிறருடைய காயங்களை சரி செய்வது. (எ.கா) திருடிய பொருளை திருப்பித்தருவது....
2. பாவத்தினால் குன்றியிருக்கும் நம்முடைய ஆன்மிக நலனை மறுபடியும் முழுமையடையச் செய்வது.

இது இங்கேயே பேறுபலன்களின் வழியாக தூய்மையாக்கப்பட வேண்டும். அல்லது இறப்புக்குப் பின் தூய்மைபெறும் நிலையில் தூய்மையாக்கப்பட வேண்டும்.

பேறுபலன்கள் , திரு அவையின் அருள்பணி வழியாக வழங்கப்படுகின்றன. திரு அவை மீட்பின் அருளை வழங்கும் கருவி. ஆகவே கிறிஸ்து, புனிதர்கள் ஆகியோருடைய பேறுபலன்களின் கருவூலத்திலிருந்து இதனை வழங்குகிறது.

தகுந்த தயாரிப்புடன் இருப்பவர்கள் தமக்காகவோ அல்லது இறந்தோருக்காகவோ இப் பேறுபலன்களை பெற முடியும்.

#24
## நிறைபேறுபலனை பெற

### நிறைபேறுபலனை பெற நாம் செய்ய வேண்டியவை

யூபிலி நிறைபேறுபலனை முழுமையாகவும் பயன்தரக்கூடிய வகையிலும் நாம் பெறுவதற்கான ஒழுங்குமுறைகள் பின்வருமாறு:

- உண்மையாக மனம்திரும்பி, பாவம் செய்யும் நாட்டத்திலிருந்து முற்றிலுமாக விலகி இருக்க வேண்டும்.
- ஒப்புரவு அருளடையாளத்தினால் பாவங்கள் மன்னிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- தகுந்த தயாரிப்போடு தூய்மைமிகு நற்கருணையை நாம் பெற்றிருக்க வேண்டும்.
- பிறருக்கு உதவும் மனம் கொண்டிருக்க வேண்டும்.
- திருத்தந்தையின் கருத்துக்களுக்காக ஜெபிக்க வேண்டும்.

இவற்றோடு சேர்த்து நாம் பின்வரும் செயல்களைச் செய்யலாம்.....

- திருப்பயணம் மேற்கொள்ளுதல்.
- நற்கருணை ஆராதனையில் பங்குகொள்ளுதல், செபமாலை செபித்தல், இயேசு கற்று தந்த இறைவேண்டல், நம்பிக்கை அறிக்கை போன்ற செபங்களை யூபிலிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பசிலிக்காக்களில் சொல்லுதல்.
- மரியன்னையின் பரிந்துரையை நாடுதல்.
- தவம், மற்றும் இரக்கச் செயல்களில் ஈடுபடுதல்.

## திருச்சி மறைமாவட்ட ஞாயிறு மறைக்கல்வி யூபிலி ஆண்டு விழா

05.10.2025 ஞாயிறு அன்று, திருச்சி நல்லாயன் நிலையத்தில், நான்காம் ஆண்டாக திருச்சி மறைமாவட்ட ஞாயிறு மறைக்கல்வி ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் மாறுவேடம், குழு நாடகம் , குழு நடனம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

இக்கலைப் போட்டிகளில் பெற்றோர்கள், ஞாயிறு மறைக்கல்வி சிறப்புத் தேர்வில் பரிசுகள் பெற்றோர் நீங்கலாக, ஆசிரியர்களும் மாணாக்கரும் மட்டும் 533 பேர் பங்கேற்றனர். புத்தூர், பொன்மலை, கிராப்பட்டி, கீரனூர் ஆகிய நான்கு மறைவட்டங்களிலிருந்து, மொத்தம் 43 பங்குகள் கலந்துகொண்டன. மாணவர்களையும் ஆசிரியர்களையும் அனுப்பி வைத்த எல்லா பங்குத் தந்தையருக்கும் எம் சிறப்பான நன்றிகள்.

காலையில் அருள்பணி. பவுல்ராஜ் சே.ச. அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார். பின்பு நம் மறைமாவட்ட ஆயர் மேதகு. ச. ஆரோக்கியராஜ் அவர்கள் தலைமைதாங்கி, ஆசியுரை வழங்கினார். அருள்சகோ. கஸ்பார் மேரி அவர்கள் முன்னிலை வகித்து வாழ்த்துரை வழங்கினார். அருள்சகோ. லூர்ட்ஸ், அருள்சகோ. சில்வியா, திருமிகு. அமுதா, திருமிகு. ரமா, ஆகியோர் மதிப்பீட்டாளர்களாய் செயல்பட்டனர். சிறப்பு விருந்தினர்கள் அருள்பணி. ஜெயராஜ், திருமிகு. மெர்லின் வினோதா திருமிகு. அந்தோணி ராஜ் ஆகியோர் பரிசுகள் வழங்கினர்.

















# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்






















## மணப்பாறை மறைவட்ட ஞாயிறு மறைக்கல்வி யூபிலி ஆண்டு விழா 2025

12.10.2025 ஞாயிறு அன்று, மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயத்தில், ஞாயிறு மறைக்கல்வி யூபிலி ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது. இதில் மாறுவேடம், குழு நடனம், குழு நாடகம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

இக்கலைப் போட்டிகளில் மணப்பாறை மறைவட்டத்தின் 15 பங்குகள், கீரனூர் மறைவட்டத்தின் 2 பங்குகள் ஆகியவற்றிலிருந்து மொத்தம் 17 பங்குகளைச் சேர்ந்த 199 மாணாக்கரும் 43 ஆசிரியர்களும் பங்கேற்றனர்.

திருச்சி மறைமாவட்ட முதன்மை அருள்பணியாளர் பேரருள்பணி. அந்துவான் அவர்கள் திருப்பலி நிறைவேற்றி சிறப்புரை வழங்கினார். மணப்பாறை மறைவட்ட அதிபர் அருள்பணி. தாமஸ் ஞானதுரை அவர்கள் வாழ்த்துரை வழங்கி நிகழ்வுகளைத் தொடங்கி வைத்தார். அருள்சகோ. இருதய தெரஸ், அருள்சகோ. தேவ சகாயராணி ஆகியோர் மதிப்பீட்டாளர்களாய் செயல்பட்டனர். திருமிகு. ரொசாரியோ இம்மானுவேல் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.













ஞாயிறு மறைக்கல்வி


ஞாயிறு மறைக்கல்வி




ஞாயிறு மறைக்கல்வி


ஞாயிறு மறைக்க
யூபிலி ஆண்டு விழ

# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்




















## மணப்பாறை மறைவட்ட தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கான மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி யூபிலி ஆண்டு கலைத் திருவிழா

09.10.2025, வியாழன், காலை 09.30 மணிக்கு மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயத்தில், தொடக்க, நடுநிலைப் பள்ளிகளுக்கான மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி யூபிலி ஆண்டு விழா நடைபெற்றது. மாறுவேடம், குழு நடனம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

அருள்பணி. எட்வர்ட் ராஜா அவர்கள் இவ்விழாவைத் தொடங்கி வைத்து ஆசியுரை வழங்கினார். அருள்பணி. வில்சன், அருள்பணி. சகாய ஆன்டோ ராஜ் ஆகியோர் போட்டிகளுக்கான மதிப்பீட்டாளர்களாய் செயல்பட்டனர். திருமிகு. ஜான் சாலமன், திருமிகு. ஜெரால்டு அந்தோணி ததேயு ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் 19 தொடக்கப்பள்ளிகளிலிருந்து 114 மாணவர்களும் 30 ஆசிரியர்களும், 4 நடுநிலைப்பள்ளிகளிலிருந்து 32 மாணவர்களும் 8 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.












பள்ளி மறைக்கல்வி & நன்னெறிக்கல்வி
யூபிலி ஆண்டு கலைத் திருவிழா

பள்ளி மறைக்கல்வி & நன்னெறிக்கல்வி

பள்ளி மறைக்கல்வி & நன்னெறிக்கல்வி

பள்ளி மறைக்கல்வி & நன்னெறிக்கல்வி
யூபிலி ஆண்டு கலைத் திருவிழா


பள்ளி மறைக்கல்வி & நன்னெறிக்கல்வி


பள்ளி மறைக்கல்வி & நன்னெறிக்கல்வி





## மணப்பாறை மறைவட்ட உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளுக்கான மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி யூபிலி ஆண்டு கலைத் திருவிழா

10.10.2025, வெள்ளிக்கிழமை, காலை 09.30 மணிக்கு மணப்பாறை புனித லூர்தன்னை ஆலயத்தில், உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கான மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி யூபிலி ஆண்டு விழா நடைபெற்றது. குழு நடனம், குழு நாடகம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

அருள்பணி. சகாய ஜெயக்குமார் அவர்கள் இவ்விழாவைத் தொடங்கி வைத்தார். அருள்சகோ. அருள் பிரகாசி, அருள்சகோ. பிரின்சி ஆகியோர் போட்டிகளுக்கான மதிப்பீட்டாளர்களாய் செயல்பட்டனர். அருள்பணி. பாஸ்டின் அனிட்டோ ராஜ் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் 14 பள்ளிகளிலிருந்து 132 மாணவர்களும் 25 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.














# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்
































# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்



**திருச்சி - தொடக்கப்பள்ளிகளுக்கான மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி யூபிலி ஆண்டு கலைத் திருவிழா**

14.10.2025, செவ்வாய், காலை 09.30 மணிக்கு திருச்சி நல்லாயன் நிலையத்தில், தொடக்கப்பள்ளிகளுக்கான மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி யூபிலி ஆண்டு விழா நடைபெற்றது. மாறுவேடம், குழு நடனம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

அருள்பணி. அந்தோணி சுந்தர பாண்டியன் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி இவ்விழாவைத் தொடங்கி வைத்தார். அருள்பணி. ஆரோக்கிய ரஷீன், அருள்பணி. சவரிமுத்து ஆகியோர் போட்டிகளுக்கான மதிப்பீட்டாளர்களாய் செயல்பட்டனர். அருள்பணி. வின்சென்ட் ஜோசப், அருள்பணி. இன்னாசிமுத்து ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் 21 பள்ளிகளிலிருந்து 118 மாணாக்கரும், 42 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.






















# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்


























## திருச்சி - நடுநிலைப்பள்ளிகளுக்கான மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி யூபிலி ஆண்டு கலைத் திருவிழா

15.10.2025, புதன், காலை 09.30 மணிக்கு திருச்சி நல்லாயன் நிலையத்தில், நடுநிலைப்பள்ளிகளுக்கான மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி யூபிலி ஆண்டு விழா நடைபெற்றது. மாறுவேடம், குழு நடனம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

அருள்பணி. ஆரோக்கிய பன்னீர் செல்வம் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி இவ்விழாவைத் தொடங்கி வைத்தார். அருள்பணி. ஜார்ஜ் ஜெனோ, அருள்பணி. சகாயராஜ் ஆகியோர் போட்டிகளுக்கான மதிப்பீட்டாளர்களாய் செயல்பட்டனர். அருள்சகோ. ஜேம்ஸ் பால்ராஜ், அருள்சகோ. அந்தோணி கிளாரா ஆகியோர் பரிசுகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் 19 பள்ளிகளிலிருந்து 141 மாணாக்கரும், 38 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.












# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்























# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்
















## திருச்சி - உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்கான மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி யூபிலி ஆண்டு கலைத் திருவிழா

16.10.2025, வியாழன், காலை 09.30 மணிக்கு திருச்சி நல்லாயன் நிலையத்தில், உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளுக்கான மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி யூபிலி ஆண்டு விழா நடைபெற்றது. குழு நடனம், குழு நாடகம் ஆகிய போட்டிகள் நடைபெற்றன.

அருள்பணி. லியோ ஜான்சன் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி இவ்விழாவைத் தொடங்கி வைத்தார். அருள்பணி. தாமஸ் எடிசன், அருள்பணி. ஜோசப் விஜய் ஆகியோர் போட்டிகளுக்கான மதிப்பீட்டாளர்களாய் செயல்பட்டனர். பங்கேற்பாளர்களுக்கான பரிசுகளையும் வழங்கினர்.

இந்நிகழ்வில் 21 பள்ளிகளிலிருந்து 170 மாணாக்கரும், 40 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்



























# கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

## திருச்சி மறைமாவட்டம்

















## திருச்சி - ஆங்கில வழிப் பள்ளிகளுக்கான மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி யூபிலி ஆண்டு கலைத் திருவிழா

17.10.2025, வெள்ளி, காலை 09.30 மணிக்கு திருச்சி நல்லாயன் நிலையத்தில், ஆங்கில வழிப் பள்ளிகளுக்கான மறைக்கல்வி - நன்னெறிக்கல்வி யூபிலி ஆண்டு விழா நடைபெற்றது. மாறுவேடம், நாடகம், குழுநடனம், பல்சுவை நிகழ்ச்சி ஆகிய போட்டிகள் நடைபெற்றன.























அருள்சகோ. ஜூலியட் ரோஸ்லின் அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி இவ்விழாவைத் தொடங்கி வைத்தார். அருள்பணி. பிரகாஷ், அருள்பணி. மோசஸ் ஸ்டீபன் ராஜ் ஆகியோர் போட்டிகளுக்கான மதிப்பீட்டாளர்களாய் செயல்பட்டனர். அருள்பணி. தாமஸ் அவர்கள் போட்டியாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் 13 பள்ளிகளிலிருந்து 196 மாணாக்கரும், 35 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.



## கிறிஸ்தவ வாழ்வு பணிக்குழு

திருச்சி மறைமாவட்டம்



# 2 படங்களுக்கு இடையேயுள்ள 6 வித்தியாசங்களை கண்டுபிடித்து மகிழுங்கள்

கடவுள் தெபோராவை அவர்களின் எதிரிகளிடமிருந்து விடுவிக்கவும் வழிநடத்தவும் குறிப்பிடத்தக்க வகையில் பயன்படுத்தினார்

